

உ

சிவமயம்

# சின்னவயதில் சிறகடித்துப் பறந்திட்ட வண்ண மகளாள்

## மூளாயூர்

## செல்வி.சின்னத்துரை சுந்திரவதனா

அவர்களின்

நீங்காத நினைவுகளைத் தாங்கிவரும்

# நினைவு மலர்

25.09.2006



சின்ன வயதில் சிறகடித்துப் பறந்தவளே
சின்னத்துரையார் பார்வதிப்பிள்ளை பெற்ற மகளாளே
வண்ண அழகோடு வாழ்வதற்காய் வந்துதித்து
எண்ணத்தைச் சிதகடித்து விண்ணில் பறந்தாயோ!

மண்ணைவிட்டு அகன்றாலும்
மக்களின் மனங்களை விட்டகலாத
மாதரசி

# செல்வி.அமரர்.சின்னத்துரை சந்திரவதனா

அவர்களுக்கு
இம்மலர்

# சமர்ப்பணமாக

சந்திர வதனா என்றோர் பேரினைத் தாங்கிவந்து

சுந்தர அழகினோடு சுடரெலாம் பரப்பிநின்று

தந்தையைத் தாயைப் பேணி தமயன்மார்

பணிகள் செய்து

பிந்தியே பிறந்தாள் தங்கை போற்றிடத் துணையாய் நின்ற

சந்திரவதனா என்னும் பூந்தளிர் மகளாள் இன்று

வெந்தணல் மீதிலேறி வேத நாயகன் பாதம் சேர

சிந்திடும் கண்ணீர் சேர்த்தோர் சிறுமலர் நாங்களாக்கி

தந்தோம் சமற்பணமாய் தாயே நீர் ஏற்றருள்வீர்!

உ

சிவமயம்

பிறப்பே பிள்ளைக்கு துரோகம் இழைத்ததோ
இறப்பை இவ்வளவு இளமையில் சந்தித்தாள்
இருந்தாலும் இவள்எம் நெஞ்சத்தில்
வாழ்வாள்

# மூளாயூர்
# அமரர்.செல்வி. சின்னத்துரை சந்திரவதனா
# அவர்கள்



**பிறப்பு**
**11.11.1978**

**இறப்பு**
**26.08.2006**

மதிபோன்றும் முகத்தழகாள் சந்திரவதனா நங்கை
விதி வசத்தால் இறையடியே கதியென்று அடைந்தத்தி
பதிபோன்றும் ஆவணியின் வளர்பிறை வழிவந்த
துதியைத் திதியதுவாம் என்றெண்ணி என்றும் துதி!

# கல்வெட்டு

நாங்கள் அனைவரும் எங்களுடைய விருப்பத்தில் பேரில் இங்கு வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். இந்த இனியமகள் செல்வி. சந்திரவதனா அவர்கள் தன் விருப்பத்துக்குமாறாக இந்த உலகை விட்டுப் பிரிந்து விட்டார். நாங்களும் என்றோ ஒரு நாள் எங்கள் விருப்பத்துக்குமாறாக இந்த உலகைவிட்டுப் பிரியத்தான் போகின்றோம். நாம் பிறந்தபோதும் வெறும் கையோடுதான் பிறந்தோம். இறக்கின்றபோதும் வெறும் கையோடுதான் இறக்கப்போகின்றோம். ஆனால் இங்கே எமது எச்சங்களாக வாழப்போவது நாம் வாழும் போது மற்றவர்களோடு நடந்துகொண்ட முறைமாத்திரம்தான். ஆதலினால் இந்தமலர் ஆக்குவதற்கு காரணமாக இருந்த இனியமகள் செல்வி. சந்திரவதனா போல நாமும் இவ்வுலகில் வாழும் போதே மற்றவர்கள் போற்றும் படியாக வாழ்வோமாக!

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அமரர்
செல்வி.சின்னத்துரை சந்திரவதனா அவர்களின்
ஆத்ம ஈடேற்றத்திற்காக
இறையடி போற்றிப் பணிவோமாக!



# பஞ்சபுராணம்



## விநாயகர் துதி

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான்
விநாயகனே விண்ணுக்கும் மண்ணுக்கும் நாதனுமாம்
தன்மையினாற் கண்ணிற்பணிமின் கனிந்து!

## தேவாரம்

கூற்றாயினவாறு விலக்ககலீர்
    கொடுமை பல செய்தனை நானறியேன்
ஏற்றாயடிக்கே யிரவும் பகலும்
    பிரியாது வணங்குவ னெப்பொழுதும்
தோற்றாதென் வயிற்றினகம்படியே
    குடலோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேனடியே னதிகைக் கெடில
    வீரட்டானத் துறையம்மானே!

## திருவாசகம்

பால்நினைந்தூட்டும் தாயினுஞ் சாலப்
    பரிந்துநீ பாவியேனுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
    உலப்பிலா ஆனந்தமாய
தேனினைச் சொரிந்து புறம் புறம் திரிந்த
    செல்வமே சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப்பிடித்தேன்
    எங்கெழுந் தருளுவதினியே!

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே யுலப்பிலா வொன்றே
உணர்வு சூழ் கடந்ததோருணர்வே
தெளிவளர் பளிங்கின் றிரள்மணிக்குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே
அம்பல மாடரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந்தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே!

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்த பிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தனர் வாழ்கின்ற
தில்லைச் சிற்றம்பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே!

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு
வேண்டிப் பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும்
பிறப்புண்டேல் உன்னையென்றும்
மறவாமை வேண்டும் இன்னும்
வேண்டும் நான் மகிழ்ந்துபாடி
அறவா நீ ஆடும் போதுன்
அடியின்கீழ் இருக்கவென்றார்!

## திருப்புகழ்

பக்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமா தானசற் குணநேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் திணிபாதா
வெற்றி வேலாயுதப் பெருமானே!

## வாழ்த்து

வான்முகில் வளாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க
நான்மறை அறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்!

## நூற்பயன்

ஆத்தாளை எங்கள் அபிராம வல்லியை அண்டமெலாம்
பூத்தாளை மாதுளம் பூ நிறத்தாளை புவியடங்கக்
காத்தாளை அங்கையில் பாசாங்குசம் வில்லும்
சேர்த்தாளை முக்கணியைத் தொழுவார்க்கு ஒரு தீங்கிலையே



அமரர்

## மூளாயூர். செல்வி.சின்னத்துரை சந்திரவதனா அவர்களின் வரலாற்றுக் குளிப்புகள் சில

சந்திரவதனா என்றோர் சுந்தரமகளாள் தோன்றி
சிந்தையைக் கிழறி வாழ்க்கைச சிறப்பினைச் சொல்லிச் சென்றாள்
சொந்தமும் பந்தமும் பொய் நாம் வந்ததும் போவதும் பொய்
முந்தைவினையெதுவோ அதுவே எம்மைத் தன்வழி நடத்துமென்றோ

**ஈழமணித் திருநாட்டின் இணையில்லாக் கிராமங்களில் ஒன்றான மூளாய்க் கிராமத்தின் தென் பகுதியிலே அறிவும், ஆற்றலும், உழைப்பும், உற்சாகமும், கல்வி வளமும், கலை வளமும் நிரம்பி வளிந்த குடும்பமாகத் திகழ்ந்தது அமரர்.கந்தையா சிவகாமன் தம்பதியரின் குடும்பமாகும். இவர்கள் இல் வாழ்க்கையின் பயனாகப் பெற்ற பிள்ளைகள் ஜவரிலே மூன்றாவது மகனாகப் பிறந்தவர்தான் உயர்திரு. சின்னத்துரை அவர்களாவார். திரு.சின்னத்துரை அவர்கள் கல்வியிலே வல்லவராகவும் கலை கலாச்சார ஒழுக்கமுடையவராகவும் வாழ்ந்து அரசாங்க அஞ்சல்ப் பகுதியிலே தொழிலாற்றுபவராகவும் விழங்கினார் திரு.சின்னத்துரை அவர்கள் திருமணப் பருவத்தை அடைந்ததும் தனது தாய்மாமனாக விழங்கிய மூளாய் கிராமத்தின் தென்பகுதியிலே வாழ்ந்து வந்த கல்வி வளமும், கலைவளமும், கமபுல வளங்களும் ஒருங்கே அமையப்பெற்ற திரு.வைத்திலிங்கம் செல்லமுத்து தம்பதியர் குடும்பத்திலே அவருடைய பிள்ளைகள் எழுவரிலே இரண்டாவது பிள்ளையாகப் பிறந்த சொந்த மைத்துணியான பார்வதிப்பிள்ளை அவர்களைத் திருமணம் செய்து கொண்டார்.**

**திரு.சின்னத்துரை பார்வதிப்பிள்ளை தம்பதியர்கள் இல்வாழ்க்கையினை சீரோடும் சிறப்போடும் நடாத்திவரும் வேளையிலே அவ் வாழ்க்கையின் இனிய செல்வங்களாக**

பிள்ளைச் செல்வங்கள் நால்வரினைப் பெற்று மகிழ்ந்தனர். மூத்த மகனான திரு.சிவகுமார் அவர்கள் கல்வியிலே வல்லவனாகி கற்பவை கற்றுப் பின் கனடா நாட்டிற்கு சென்று அங்கே தொழிலாற்றுபவராகி மனைவி மக்களோடு வாழ்ந்து வருகின்றார். இரண்டாவது மகனான திரு.மதனகுமார் அவர்கள் பட்டப்படிப்பை முடித்துக் கொண்டு ஈழமணித் திருநாட்டின் வன்னிப்பகுதியிலே கல்லூரி ஆசிரியராகக் கடமையாற்றுகின்றார். நான்காவது மகளான செல்வி. மதனராணி அவர்கள் கல்வியிலே கலையிலே வல்லவராகி வெளிவாரியான பட்டப்படிப்பிலே ஈடுபட்டு வருகின்றார். இவர்களின் மூன்றாவது பிள்ளையான செல்வி.சந்திரவதனா அவர்களே இங்கு நாம் நோக்கும் வரலாற்று நாயகியாவார்.

செல்வி.சந்திரவதனா அவர்கள் பெண்பிள்ளை இல்லையே என்ற பெற்றோரின் குறை தீர்க்கவும், மூன்றாவது பெண்பிள்ளையாகப் பிறந்ததால் குடும்பத்துக்கு அதிஸ்ரத்தை சேர்ப்பவராகவும் 11.11.1979ல் பிறந்தார். இவரின் பிறப்பால் பெற்றோர்களும், பேரன் பேத்தியரும், மாமன்மார், மாமிமாரும், சிறியதாயாரும் சகோதரர்களும் மிகுந்த மகிழ்ச்சி யடைந்தார்கள். அனைவருக்கும் செல்லப்பிள்ளையாக இருந்ததால் எல்லோரும் இவருக்கு மிகுந்த பாசத்தை ஊட்டி வளர்த்தார்கள். சந்திரவதனாவும் தனது பெயருக்கு ஏற்றவகையிலே அழகும் ஆற்றலும் மிகுந்தவராக வளர்ந்து வந்தார்.

வதனா அவர்கள் பள்ளிப் பருவத்தை அடைந்ததும் துடிப்பு மிக்க பிள்ளையாகத் திகழ்ந்த இவர் தனது ஆரம்பப்படிப்பினை மூளாய் அமெரிக்கன்மிசன் தமிழ்க்கலவன் பாடசாலையிலும், பின்னர் மேற்படிப்பை சுளிபுரம் விக்ரோறியாக் கல்லூரியிலும் கற்று வந்தார். கல்வியிலே வல்லவராகி ஒவ்வொரு வகுப்பிலும் முதன்மை

இடத்தைப் பிடித்து வந்தார். அதேபோல கலைத்துறையிலேயும் மிகுந்த ஆர்வமுடையவராகவும் விளங்கினார். சிறுவயதிலேயே சைவத்தமிழ்ப் பற்றுடையவராகவும் ஆலயங்களுக்கு செல்வதிலும் சமய நிகழ்வுகளைப் பாற்பதிலும்,கேட்பதிலும் இறைவன் மீது பக்தி செலுத்துவதில் பற்றுடையவராகவும் திகழ்ந்தார்.

தான் தனது குடும்பத்திலே மூத்த பெண்பிள்ளையாகப் பிறந்துள்ளேன் என்பதை அறிந்துகொண்ட பராயம்தொட்டு அந்தஸ்தானத்தை காப்பாற்றும் நோக்கோடு பெற்றோருக்கு உதவுவதிலும் வீட்டு வேலைகளைச் செய்வதிலும் சகோதரர்களின் தேவைகளை நிறைவேற்றிக் கொடுப்பதிலும் மிகுந்த அக்கறையோடு ஈடுபட்டுவந்தார். பரந்த உள்ளமும், தயாளசிந்தையும், அறிவும், ஆற்றலும் நிரம்பியவராக செல்வி.வதனா அவர்கள் விளங்கியதால் குடும்ப உறவினர்களுக்கிடையே ஓர் அரிய உறவுப்பாலம் போலத் திகழ்ந்தார். வெளிநாட்டிலும் உள்நாட்டிலும் இருக்கின்ற சகோதரர்களையும், மைத்துணி மருமக்களையும் மாமன் மாமியர்களையும், மைத்துனர்களையும், சிறியதாயார், சிறிய தந்தையார் பிள்ளைகளோடு தந்தை வழி உறவினர்களையும் தன்னுடைய அன்பாலும் பாசத்தாலும் அரவணைத்து நடந்து வந்தார்.

எல்லோருடைய அன்பும் அரவணைப்பும் பிள்ளை வதனாவின் மேல் இருந்தபோது வதனாவுடைய பராயவிழா மிகவும் சிறப்பாக நடைபெற்றது. அலங்காரமாக அமர்ந்து மணப்பெண்போலக் கோலம்பூண்டு வதனா அவ்விழாவினை ஏற்றுக்கொண்டாள். இன்னுமொரு பத்துவருடத்திலே வதனா இவ்வாறுதான் மணக்கோலம் பூண்டு வாழ்க்கைப்பட்டுச் சென்றுவிடுவாள் என்று பெற்றோரும் உற்றார் உறவினர்களும் எண்ணினர் போலும் எல்லோருடைய கண்களிலும் ஆனந்தக்கண்ணீர் ததும்பியது. பதிலுக்கு வதனாவும் கண்ணீர் சிந்தினாள்

என்ன நினைத்து அவள் அன்று கண்ணீர் சிந்தினாளோ என்பது அப்போது அந்த ஆண்டவனுக்குத்தான் தெரிந்திருக்கும்.

வண்ணத் தமிழ்ப் பெண்ணாக வளர்ந்துவந்த வதனா வாட்டமுற்றாள், நோய்வாய்ப்பட்டு துடித்தாள். பெற்றோரும் உறவினர்களும் வதனாவை தம்மால் இயன்றவரையிலே குணப்படுத்துவதற்காக வைத்தியர்களிடம் கொண்டு சென்றனர். கொழும்பிலுள்ள வைத்தியசாலைகளுக்கெல்லாம் வதனாவைக் கூட்டிச்சென்று சிகிச்சை செய்தனர் வதனாவுக்கு ஏற்பட்ட நோயானது இன்று நேற்று ஏற்பட்ட நோயல்ல அது பிறப்பிலேயே ஏற்பட்டது. இப்போதுதான் வெளிக்காட்ட ஆரம்பித்துள்ளது என்று வைத்தியர்கள் சொன்னார்கள். பெற்றோரும் உறவினர்களும் வதனாவுக்கு சிகிச்சை அளிப்பதோடு மாத்திரம் நின்று விடாமல் தெய்வநேத்திகளையும் வைத்து மென்மலரைப் பாதுகாப்பது போல பாதுகார்த்தார்கள். ஆனால் வதனா இதுவரை காலமும் தன்னோடு முடக்கிவைத்திருந்த வேதனைகளை அன்று வெளிக்காட்டினாள். துடித்தாள், துவண்டாள், பதைபதைத்தாள் இதுவரைகாலமும் தன்னை நேசித்துப்பாதுகாத்த உறவுகளை விட்டுப் பிரியமுடியாமல் தவித்தாள் ஆனாலும் காலன் அவளை விட்டுவைக்கவில்லை. 26.08.2006 அதிகாலை வேளை உலகத்து மலர்களெல்லாம் மணம்பரப்பி மலர்கின்ற நேரம் விடிவுக்காய் சேவல்கள் விளித்துக் கூவுகின்ற பொழுதில் உறவு என்கின்ற பெருமரத்திலே பூத்துக் குலுங்கிய சந்திரவதனா என்கின்ற அந்த மென்மலர் எல்லோருடைய கண்களையும் குளமாக்கி உதிர்ந்தது.

"உதிர்ந்த அந்தமென்மலர் இறைவனின்
பாதங்களில் சங்கமமாகட்டும்"

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

### இழக்கக்கூடாததை
### இழந்து தவிக்கும் பெற்றோரின்
### உள்ளக்குமுறல்

மூத்தவளாய் வந்தாய்நீ முத்தங்கள் தந்தாய்
சித்தம் குளிர எங்கள் சிந்தையிலே நின்றாய்
நித்தம் எம்முன்னே அசைந்தாடி வந்தாய்நீ
புத்தம் புதமலராய் பூமுகத்தைத் தந்தாய்
வித்தகம் கற்றவளே வதனா எம்மகளே நீ
உத்தமி என்றபேர் உள்ளளவும் சுமந்தாய்
இத்தனை வாழ்வுனக்குப் போதுமோ அம்மாநீ
பெத்த எம்மனம் நோகப் பிரானடி சேர்ந்திட்டாய்!

### தாய்க்குத் தாயாக வாழ்ந்த சகோதரியின்
### இழப்பை ஈடுசெய்யமுடியாத
### சகோதரர்கள்

நாவல் மரத்தடியில் பூவரசம் தடி நட்டு
ஆவலோடு அதில் கோவில் கட்டி விளையாடி
தாவல் மரமேறித் தனிமாங்காய் தான்பறித்து
சீவல் ஆக்கியதில் சிறுதுண்டைப் படைக்கையிலே
கூவும் குரல் கேட்டுக் குலைந்தோடி அன்னையிடம்
காவல் இருந்து கறிசோறு உண்டோம் நாம்
ஏவலது வந்ததுவோ வதனாநீ சாய்ந்திட்டாய்
சேவல் கூவுமினி விடியல்தான் எமக்கிலையோ!



## மகளுக்கு மகளாக வாழ்ந்த மருமகளை எண்ணி மனம் நெகிழும் மாமன் மாமிமார்கள்

வதனா வதனா என்று வாய்நிறைய அழைத்தேம் நாம்
அதனாலே எம்மிடமும் அன்பைப் பொழிந்தாய் நீ
விதம்விதமாய் உனக்குநாம் வேண்டியது செய்தே
இதமாக இருந்தவென்று எண்ணியே இருந்தோம் நாம்
பதம்பார்க்க உன்னுயிரோ காலனுக்குக் கிடைத்ததின்று
வதம்செய்தே விண்ணலகம் வாவென்று அழைத்திட்டான்
நிதமெங்கள் நெஞ்சத்தில் நடமாடும் மருமகளே நீ
ரதமேறிப் போனாயோ மாமனரை மறந்தாயோ!

## தந்தைக்கு தந்தையாகவும் தாய்க்கு தாயாகவும் விளங்கிய சிறிய தந்தையர்மார் சிறிய தாயார்மார் பெரியதாயார் ஆகியோரின் உள்ளத்து உணர்வுகள்

சந்திரவதனா என்றதோர் பேர்சூட்டி
இந்திரலோகத்துப் பெண்ணாக உனைநாமும்
சிந்தையில் இருத்தியே சீராட்டு வந்தோம்நாம்
சுந்தரமகளாக சுடர்விட்டே வந்தாய் நீ
தந்திரமோ செய்தான் பிரமன் உனைப்படைக்கையிலே
வந்திடு சீக்கிரமே என்னிடத்திலென்று
அந்தரமோ வந்ததின்று செந்தூரப்பொட்டே நீ
விந்தையது காட்டி விரைந்திட்டாய் எமைவிட்டே!

## பேரப்பிள்ளையின் பிரிவாற்றாது தவிக்கும் பேத்தியார்

முந்திப்பிறந்த என்முத்தே வதனாவே
முகமலர்ந்து எனையழைக்கும் மோகனமே
சந்திவரைவந்து வழியனுப்பி வைத்திட்டு
சசிக்காமல் நோக்கிநிற்கும் சந்திரனே
அந்தி பகலாய் என் அருகிருந்து ஆழாகி
அவனியிதில் பவனிவந்த அன்பே
சொந்தமெலாம் ஏன்மறந்தாய் வெந்தனலேறி
சொற்கம்தான் புகுந்தாயோ சொல்வாய்!

## உடன்பிறவாச் சகோதரர்களின் உள்ளக்குமுறல்

கூடிப் பிறக்காத குறையொன்றைத் தவிர உனில்
தேடித்தான் கண்டகுறை வேறேதுமுண்டோ
ஆடிப்பாடியெம் அன்பினைப் பெற்றிட்ட
மூடிக்கிடக்காத முத்தே எம்வதனாக்கா
நாடிபிடித்தவர்கள் நீடிய ஆயுளென்றார்
சோடிப்புறாப்போல சேர்ந்திங்கு வாழ்ந்தீர்
கோடி மனங்களிலே கொடுக்கும் மனம் கொண்டவளே
ஓடித்தான் போனதென்ன ஒருநொடியில் சாய்ந்ததென்ன!

## மைத்துனர் மைத்துனிமார்களின் மனக்கவலை

இன்முகம் காட்டிநின்றாய் இனியவை கூறிநின்றாய்
வெண்முகில் விலகியோட வெள்ளிநிலா வாகிநின்றாய்
கன்னியாய் ஆகிநின்றாய் கண்ணியம் காத்துநின்றாய்
திண்ணிய மனத்தினோடு திகளொளி தந்துநின்றாய்
புண்ணிய மகளே எங்கள் புனிதமே வதனா மச்சாள்
எண்ணியதென்ன நீயும் எழிமையாய் வாழ்ந்து இன்று
கண்ணினை மூடிக்கொண்டு கடுகதி விதியினோடு
விண்ணிடை வந்தான் ஐயன் அடியினை பற்றிச்சென்றாய்!

## உத்தமி சந்திரவதனா அவர்களின் பிரிவால் துயருறும் உற்றார் உறவினர் ஊர்மக்கள்

முற்றத்து மல்லிகையாய் பூத்துக் குலுங்கிநின்றாய்
சுற்றத்தார் அனைவரையும் அகதுக்கம் கேட்டுநின்றாய்
பற்றற்றாள் போலிறைவன் பாதத்தைப் பற்றிநின்றாய்
கற்றபடி காலமெலாம் கண்ணியமாய் ஒழுகிநின்றாய்
குற்றத்தை யார்புரிந்தார் வதனா நீ கூறிடுவாய்
பெற்றாரோடு எமையெல்லாம் சோகத்தில் ஆழ்த்திவிட்டு
உற்றாரோடு உறவினரும் ஊரவரும் கதறியழ
சொற்கத்தில் புகுந்தாய் நீ சோதியுட் கலந்தாய்

"ஒன்று இறக்கும் போது இன்னொன்று பிறக்கின்றது. ஒன்று பிறக்கும் போது இன்னொன்று இறக்கின்றது. பிறப்பும் இறப்பும் உலக நியதி அதனால் பிறக்கும் போது மகிழ்வதையும் இறக்கும் போது வருந்துவதையும் விட்டுவிடுங்கள்"

### தேற்றம்

*சந்திரவதனா நங்கை தரணியில் வந்துதித்து*
*சுந்தர வடிவம் தாங்கி சுடரொளி பரப்பிநின்று*
*விந்தைகள் பலவும் காட்டி வியத்தகு கடமைசெய்து*
*சொந்தங்கள் பந்தங்களோடு சேர்ந்திங்கு வாழ்ந்துவிட்டு*
*நொந்துடல் நோயில் வீழ நமைவிட்டு மறைந்தாளென்று*
*சிந்தனைசெய்து யாரும் வெந்திங்கு வெதும்பவேண்டாம்*
*தந்ததை இறைவன் கேட்டான் தன்னடி சேர்க்கவென்று*
*சந்திரா சென்றாளென்றே சற்றுநீர் தேற்றம் கொள்வீர்!*

## தென்மூளாய்த் தலத்திருக்கும் ஐயப்பசுவாமி வரலாற்றுச் சிறப்புப் பக்திப்பாடல்கள்

தென்மூளாய்த் தலத்திருக்கும் ஐயப்பசாமி -நல்ல
தென்றலினில் குடியிருக்கும் ஐயப்பசாமி
கண்ணயர்ந்து தூங்குகையில் காவல்தெய்வம்-நாங்கள்
கண்கலங்கும் வேளையெல்லாம் காத்ததெய்வம்!

பொன்னிறத்து வானம்போய் சரியுமிடம்- நல்ல
பொன்னாலைக் கடல்வந்து படுக்குமிடம்
எண்ணுதற்கு அரியமூளாய் தென்புலத்தே-வந்து
ஏற்றமுற அருள்சுரக்கும் ஐயப்பசாமி!

காணிநிலம் விளையவைக்கும் ஐயப்பசாமி - நல்ல
காடுவிட்டு வந்தகடல் அழித்தசாமி
பாடுபட்டு உழைப்பவற்கு பலன்கொடுப்பார்- பாரில்
தென்மூளாய்த் தலத்திருக்கும் ஐயப்பசாமி!

கேணியுடன் காணிகளும் நிறைந்திருக்கும் - நல்ல
ஆனிரைகள் வந்துஅடி பணிந்துநிற்கும்
தோணிகொண்டு செல்பவற்கும் துணையில்நிற்கும் -எங்கள்
தென்மூளாய்த் தலத்திருக்கும் ஐயப்பசாமி!

முடிவரை வந்தவெள்ளம் தடுத்ததனால் - மூளாய்க்
குடிகளைக் காத்தகதை ஐயன்கதை
விடிவெள்ளி தோன்ற எழும் விவசாயி - வாழத்
தென்மூளாய்த் தலத்திருக்கும் ஐயப்பசாமி!

தென்வாசல் திறந்துவிட்டால் விளையும் உப்பு - நல்ல
தில்லை நடராஜன் ஆடம் சுடலையொடு
நம்வாசல் திறந்துவிட்டால் விளையவைப்பான் -அருள்
தென் மூளாய்த் தலத்திருக்கும் ஐயப்பசாமி!

மாட்டொழுங்கை ஐயனுக்கோர்மனை வீதி - நல்ல
காட்டருகு களித்திருக்க நந்தவனம்
வீட்டருகு விளையும்செல்வம் அவனருளே -எங்கள்
தென்மூளாய்த் தலத்திருக்கும் ஐயப்பசாமி!

நீரிறைக்க வாருமென உழவர்களை - நல்ல
ஊருறங்கும் வேளையிலே அழைத்துவந்து
துள்ளித்துள்ளி துலாமிதித்து நீரோட - எங்கள்
தென்மூளாய் தலத்திருக்கும் ஐயப்பசாமி!

சித்திரையில் கஞ்சி அவன் சிறப்பாகும் - நல்ல
வைகாசிப் பொங்கல் அவன் பொருளாகும்
மார்கழியில் திருவெப்பா மகிமைசொல்லும் - எங்கள்
தென்மூளாய் தலத்திருக்கும் ஐயப்பசாமி!

ஐயப்பன் வீட்டருகே அறுகெடுத்து - நல்ல
ஆண்டிச்சி காட்டு மாட்டுப்பால் கறந்து
பிட்டிவெளி நெல்லுக்குற்றி பிரசாதம் - வைக்க
தென்மூளாய் தலதருள்வான் ஐயப்பசாமி!

முத்தழகன் முருகனுடன் கணபதியும் வந்து
சித்தமுற அருள்சுரக்கும் மூளாயூர்
சுற்றமுறக் கண்ணனுடன் காளியாத்தாள் - காக்க
தென்மூளாய் தலத்தருள்வான் ஐயப்பசாமி!

புள்ளினங்கள் பறந்துவந்து மணியபிக்கும் - நல்ல
பூங்காற்றுத் தவழ்ந்துவந்து பூசைசெய்யும்
எள்ளினங்கள் எண்ணையூற்றி விளக்கெரிக்கும் -எங்கள்
தென்மூளாய் தலத்திருக்கும் ஐயப்பசாமி!

நாகம்பிரான் கூடஅவர் குடியிருப்பார் - நல்ல
யாகம் செய்யும் போதிலவர் வெளிவருவார்
வேகம் கொண்டு கொடுகளை அழித்தொழிப்பார்- எங்கள்
தென்மூளாய்த் தலத்திருக்கும் ஐயப்பசாமி!

கார்முகிலில் கூடஅவர் குடியிருப்பார் - நல்ல
பார்முழுதும் பலன்பெறவே அருள்புரிவார்
ஊர்முழுதும் உய்வதற்கு உயிரானார் - எங்கள்
தென் மூளாய்த் தலத்திருக்கும் ஐயப்பசாமி!

ஏருழவன் வாழ்வுக்கவர் கரமாவார் - நல்ல
ஏற்றமுற ஏழைகட்கு துணையாவார்
பாட்டெழுதுல் பாவலற்கு பொருளாவார் - எங்கள்
தென்மூளாய்த் தலத்திருக்கும் ஐயப்பசாமி!

ஐயப்பசாமி எங்கள் ஐயப்பசாமி - நன்றாய்
நாளுமெமைக் காத்துநிற்கும் ஐயப்பசாமி
ஐயப்பசாமி அரிகர ஐயப்பசாமி - எங்கள்
தென்மூளாய்த் தலத்திருக்கும் ஐயப்பசாமி
எங்கள் தென்மூளாய்த் தலத்திருக்கும் ஐயப்பசாமி

*ஆக்கம்*
*ஆசுகவி*

## *வாழ்த்து*

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்கமன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

## *வாழ்த்து*

வாழிநம் மூளாயூர் மூத்தோன் வாழி
வள்ளியொடு தெய்வானை வேலோன் வாழி
நண்ணியிறை பூசை செய்யும் அந்தணர்கள் வாழி
நறுஞ்சைவ நெறிவளற்கும் மேலோர் வாழி
எண்ணிறைந்த பாட்டிசைக்கும் புலவோர் வாழி
ஏற்புடனே கேட்டருளும் பெரியோர் வாழி
வாழிநம் வதிரன்புலோத் தலமூர் வாழி
வளர்சைவ நெறி வாழி வாழி வாழி!

# நன்றி நவில்கின்றோம்



எமது குடும்பத்தின் ஒளிவிளக்கு செல்வி.சந்திரவதனா அவர்களோடு அவர் வாழ்கின்ற காலத்திலே அன்போடு பழகியவர்களுக்கும் அவர் நோயின் பிடியிலே அகப்பட்டு துன்புற்றவேளையிலே அவருக்கு ஆறதல் சொல்லித் தென்பூட்டியவர்களுக்கும் அவர் அமரத்துவம் அடைந்த செய்திகேட்டு எமது இல்லம் வந்து துன்பியலில் பங்கெடுத்தவர்களுக்கும் இறுதிக்கிரிகை நிகழ்வுகளின் போது எல்லா வழிகளிலும் உதவி ஒத்தாசை புரிந்தவர்களுக்கும், உள்நாட்டிலும், வெளிநாட்டிலுமிருந்தும் அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும், இறுதி ஊர்வலத்தின்போது மயானம் வரை வந்து ஆறதல் அலித்தவர்களுக்கும், இன்றைய அந்தியேட்டிக் கிரிகைகளில் பங்கெடுத்து

**அமரர்.சந்திரவதனா அவர்களின்**

ஆத்மசாந்திக்கு பிரார்த்தித்து உதவியவர்களுக்கும் காலத்தால் அழியாத எமது நன்றியையும் கடமைப்பாட்டையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நன்றி

இங்ஙனம்
குடும்பத்தவர்கள்

 சாய்ராம் பிறின்டேர்ஸ், சங்கானை.

# கீதாசாரம்

எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது
எது நடக்கின்றதோ அது நன்றாகவே நடக்கின்றது
எது நடக்க இருக்கின்றதோ அதுவும்
நன்றாக நடக்கும்
உன்னுடையது எதை இழந்தாய்
எதற்காக அழுகின்றாய்?
எதை நீ கொண்டு வந்தாய்
அதை நீ இழப்பதற்கு
எதை நீ எடுத்துக் கொண்டாயோ
அது இங்கேயே கொடுக்கப்பட்டுள்ளது
எது இன்று உன்னுடையதோ அது
நாளை மற்றொருவருடையாதாகின்றது
மற்றொரு நாள் அது வேறொருவருடையதாகும்
இதுவே உலக நியதியும்
எனது படைப்பின் சாராம்சமுமாகும்.

-பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்-



சாய்ராம் பிறிண்டேர்ஸ், சங்கானை.